63 moons

August 26, 2019

| | |
|---|---|
| Listing Compliance,<br>**BSE Limited**<br>P. J. Towers,<br>Dalal Street,<br>Mumbai – 400 001.<br>(Scrip Code: 526881) | Listing Compliance,<br>**National Stock Exchange of India Limited**<br>Exchange Plaza,<br>Bandra Kurla Complex,<br>Bandra (E), Mumbai – 400 051.<br>(Scrip Code: 63MOONS) |

Dear Sir(s),

**Sub: Newspaper advertisement for Notice of 31st Annual General Meeting, Book Closure and e-voting information**

Pursuant to the applicable regulations of SEBI (Listing Obligations & Disclosure Requirements) Regulations, 2015, please find enclosed copies of the newspaper advertisement published on August 25, 2019 in The New Indian Express (English) and Dinamani (Tamil) with respect to Notice of 31st Annual General Meeting of the Company, Book Closure and e-voting information.

You are requested to kindly take the said information on your records.

Thanking you,

Yours faithfully
For 63 moons technologies limited

Hariraj Chouhan
Sr. VP & Company Secretary

Encl: a/a

**The New Indian Express**
**August 25, 2019, Chennai**

# 63 moons technologies limited

Regd. Office: Shakti Tower-1, 7th Floor, Premises-E, 766, Anna Salai, Thousand Lights, Chennai 600 002.
Corporate Office: FT Tower, CTS No. 256 & 257, Suren Road, Chakala, Andheri (East), Mumbai 400 093.
Tel: +91-22-66868010 | Fax: +91-22-67250257 | E-mail: info@63moons.com | Website: www.63moons.com | CIN: L29142TN1988PLC015586

## NOTICE OF 31ST ANNUAL GENERAL MEETING, BOOK CLOSURE AND E-VOTING INFORMATION

**NOTICE** is hereby given that the 31st Annual General Meeting (AGM) of the Company will be held on Wednesday, September 18, 2019 at 11:00 a.m. at Sri. Chandrasekarendra Saraswathi Mahaswami Auditorium, Vani Mahal, 103, G.N. Road, T. Nagar, Chennai - 600017.

**NOTICE** is also hereby given that pursuant to the provisions of Section 91 of the Companies Act, 2013 read with applicable rules framed thereunder and Regulation 42 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 ("Listing Regulations"), the Register of Members and Share Transfer Books of the Company will remain closed from 12th September 2019 to 18th September 2019 (both days inclusive) for the purpose of AGM and for determining the entitlement of Dividend for the year ended 31st March 2019, which shall be paid subject to appropriate judicial orders.

The Notice of the AGM alongwith the communication relating to e-voting and the Annual Report of the Company for the F.Y. 2018-19 have been sent to all the members through e-mail whose email addresses are registered with the Company / Depository Participant(s). Similarly, all those members who have not registered their e-mail address, physical copies of the same have been sent at their registered postal address through permitted mode.

Pursuant to the provisions of Section 108 of the Companies Act, 2013 read with Rule 20 of the Companies (Management and Administration) Rules, 2014, Regulation 44 of Listing Regulations and Secretarial Standards on General Meetings (SS-2), the Company is pleased to provide its members the facility to cast their vote by electronic means (i.e. e-voting) on all the resolutions set forth in the AGM Notice. The Company has engaged the services of Karvy Fintech Pvt. Ltd. (Karvy), the Registrar & Share Transfer Agent of the Company, as the agency to provide e-voting facility. The e-voting will commence from 13th September 2019 (09:00 a.m. onwards) and will end on 17th September 2019 (upto 05:00 p.m.). The e-voting module shall be disabled by Karvy after 05:00 p.m. on 17th September 2019 and e-voting shall not be allowed thereafter. The facility for voting by way of physical ballot shall be made available at the AGM. Only those members whose names are recorded in the Register of Members / Beneficial owners as on the cut-off date i.e. 11th September 2019 shall be entitled to cast their votes through e-voting during the abovementioned period or by way of physical ballot at the AGM. Members may participate in the AGM even after exercising their vote through e-voting but shall not be entitled to vote again at the AGM. Members who have not cast their vote through e-voting can vote through physical ballot at the AGM. In case members cast their votes through e-voting as well as physical ballot at the AGM, voting done by e-voting shall prevail and vote cast through physical ballot shall be treated as invalid. Any person who acquires shares of the Company and becomes member of the Company after the dispatch of the Notice of AGM and holds shares as on the cut-off date i.e. 11th September 2019, may obtain the user ID and password by sending an email request to Karvy at evoting@karvy.com. Members can also contact Karvy at 1800-345-4001 (toll free).

The Notice of AGM alongwith the Annual Report for the F.Y. 2018-19 is available on Company's website www.63moons.com, Karvy's website https://evoting.karvy.com and on the websites of the stock exchanges where the shares of the Company are listed i.e. www.bseindia.com and www.nseindia.com. In case of any queries / grievances connected with e-voting, the members may visit Help & FAQ's section available at Karvy's website https://evoting.karvy.com or contact Ms. Rajitha Cholleti, Asst. General Manager, Karvy Fintech Pvt. Ltd., Karvy Selenium, Tower B, Plot No. 31 & 32, Gachibowli, Financial District, Nanakramguda, Serilingampally, Hyderabad - 500032, Tel No. 040-67162222, Email: rajitha.cholleti@karvy.com.

By Order of the Board of Directors
For 63 moons technologies limited

Place : Mumbai
Date : 24th August 2019

Hariraj Chouhan
Sr. VP & Company Secretary

**Dinamani**
**August 25, 2019, Chennai**

# 63 மூன்ஸ் டெக்னாலஜிஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: சக்தி டவர்-1, 7ஆவது தளம், வளாகம்-E, 766, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600002.
நிறுவன அலுவலகம்: FT டவர், CTS எண்: 256 & 257, சுரென் சாலை, சக்கலா, அந்தேரி (கிழக்கு), மும்பை-400093.
தொ.பே: +91-22-66868010 I தொலைநகல்: +91-22-67250257 I மின்னஞ்சல்: info@63moons.com I இணையத்தளம்: www.63moons.com I CIN: L29142TN1988PLC015586

## 31வது ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டம், கணக்கு முடிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு தகவல் அறிவிப்பு

இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், நிறுவனத்தின் 31வது ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டம் (AGM) புதன்கிழமை, செப்டம்பர் 18, 2019 அன்று காலை 11:00 மணிக்கு ஸ்ரீ. சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹாஸ்வாமி ஆடிட்டோரியம், வாணி மகால், 103, G.N. சாலை, தி.நகர், சென்னை–600017. எனும் முகவரியில் கூடுகிறது.

நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 91 மற்றும் அதன் கீழான விதிகளுக்கு ஏற்ப மற்றும் அதனுடனான SEBI (பட்டியலிடும் கடமைகள் & அறிவித்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள்–2015, ("பட்டியலிடும் ஒழுங்குமுறைகள்") ஒழுங்குமுறை 42–ன் கீழ் வகுக்கப்பட்ட விதிகளுக்குப் பொருந்தவும் ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டததிற்காகவும் 31 மார்ச் 2019 உடன் முடிவடைந்த நிதியாண்டின் இலாபப் பங்கு உரிமையைத் தீர்மானிக்கும் பொருட்டும் உரிய நீதிமன்ற ஆணைகளுக்கு இணங்கவும் நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்குப் பரிமாற்ற ஏடுகள் (Share Transfer Books) ஆகியவை 12 செப்டம்பர் 2019 முதல் 18 செப்டம்பர் 2019 வரை (குறிப்பிட்ட இரண்டு நாட்களும் உட்பட) மூடப்படும் என்பதும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான விவரங்களுடன் கூடிய ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டம் பற்றிய இந்த அறிவிப்பும் 2018-19 நிதியாண்டுக்கான நிறுவனத்தின் ஆண்டு அறிக்கையும் நிறுவனத்திடம் / முதலீட்டுப் பங்குதாரர்களிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்து வைத்துள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் மின்னஞ்சல் முறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதே போல், தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு மேற்சொன்ன அனைத்தும் அச்சுப் படிகளாக, பதிவு செய்யப்பட்டுள்ள அவர்களின் அஞ்சல் முகவரிகளுக்கு அனுமதிக்கப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 108, அதனுடனான நிறுவனங்களின் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி எண் 20, SEBI (கடமைபொறுப்புகள் மற்றும் வெளிப்படுத்துதலுக்கான தேவைகளைப் பட்டியலிடுதல்) பட்டியலிடும் ஒழுங்குமுறைகளின் நெறிமுறை 44 மற்றும் பொதுக்குழுக் கூட்டங்களுக்கான தலைமைச் செயலகத்தின் தர நிர்ணயங்கள் (SS-2) ஆகியவற்றுக்கு ஏற்ப ஆண்டுப் பொதுக்குழுக் கூட்ட அறிவிப்பில் தெளிவுறுத்தப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்கள் மீதும் மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியை (அதாவது, மின்னணு வாக்குப்பதிவு) நிறுவனம் அதன் உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ளது. இந்த மின்னணு வாக்குப்பதிவு வசதியை வழங்க நிறுவனத்தின் பதிவாளுமை நிறுவனமும் பங்குப் பரிமாற்ற முகமையுமான கார்வி ஃபின்டெக் பிரைவேட் லிட்., (கார்வி)-இன் சேவை நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மின்னணு வாக்களிப்பு 13 செப்டம்பர் 2019 அன்று (காலை 9:00 மணியிலிருந்து) தொடங்கி 17 செப்டம்பர் 2019 அன்று (மாலை 5:00 மணி வரை) நிறைவடையும். மின்னணு வாக்குப்பதிவு முறைமை 17 செப்டம்பர் 2019 அன்று மாலை 5:00 மணிக்குப் பிறகு கார்வி-யால் நிறுத்தப்படும். அதன் பின் மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்பட மாட்டாது. வாக்குச் சீட்டு மூலம் வாக்களிக்கும் வசதி ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டத்தில் வழங்கப்படும். உறுப்பினர்கள் பதிவேட்டிலோ ஆதாய உரிமையாளர்கள் பதிவேட்டிலோ குறிப்பிட்ட நாள்படி, அதாவது 11 செப்டம்பர் 2019 அன்றைய நாள்படி பதிவு செய்யப்பட்டுள்ளவர்கள் மட்டுமே மேற்படி காலக்கட்டத்தில் மின்னணு முறையில் வாக்களிக்கவோ ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டத்தில் வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்கவோ தகுதியானவர்கள் ஆவார்கள். மின்னணு வாக்குப்பதிவின் மூலம் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்திய பின்னும் உறுப்பினர்கள் ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்; ஆனால், அங்கு மீண்டும் வாக்களிக்க உரிமை இல்லை. மின்னணு முறையில் தங்கள் வாக்கைச் செலுத்தாதவர்கள் ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டத்தில் வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்கலாம். ஒருவேளை உறுப்பினர்கள் மின்னணு முறை, வாக்குச்சீட்டு முறை ஆகிய இரண்டிலுமே தங்கள் வாக்கைப் பதிவு செய்து விட்டால், மின்னணு முறையில் செலுத்தப்பட்ட வாக்கு மட்டுமே கணக்கில் கொள்ளப்பட்டு வாக்குச்சீட்டில் செலுத்திய வாக்கு மதிப்பிழந்ததாகக் கருதப்படும். ஆண்டுப் பொதுக்குழுக் கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு யாராவது நிறுவனத்தின் பங்குகளை வாங்கி, நிறுவன உறுப்பினராக இணைந்து, குறிப்பிட்ட நாள்படி, அதாவது 11 செப்டம்பர் 2019 நாள்படி பங்குகளைத் தங்களிடம் வைத்திருந்தால் அவர்கள் **evoting@karvy.com** எனும் மின்னஞ்சல் முகவரியில் கார்வி நிறுவனத்தை அணுகிப் பயனர் பெயரும் கடவுச்சொல்லும் பெற்றுக் கொள்ளலாம். உறுப்பினர்கள் 1800-345-4001 (இலவச எண்) எனும் எண்ணிலும் கார்வியைத் தொடர்பு கொள்ளலாம்.

ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டம் பற்றிய அறிவிப்பு நிதிஆண்டு 2018–19க்கான ஆண்டு அறிக்கையுடன் சேர்த்து நிறுவன இணையத்தளமான **www.63moons.com**, கார்வியின் இணையத்தளமான **https://evoting.karvy.com**, மற்றும் நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்குப் பரிவர்த்தனைத் தளங்களான **www.bseindia.com** மற்றும் **www.nseindia.com** ஆகிய தளங்களில் கிடைக்கும். மின்னணு வாக்களிப்புத் தொடர்பான கேள்விகள் / மனக்குறைகள் ஏதேனும் இருந்தால் உறுப்பினர்கள் கார்வியின் இணையத்தளமான **https://evoting.karvy.com**-இல் உள்ள உதவி மற்றும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (Help & FAQ) பிரிவை நாடலாம். அல்லது தொடர்பு கொள்க: **Ms.** ரஜிதா சொலேட்டி, உதவி பொது மேலாளர், கார்வி ஃபின்டெக் பிரைவேட் லிட்., கார்வி செலெனியம், டவர் B, மனை எண்: 31 & 32, காச்சிபௌளி, நிதி மாவட்டம், நானக்கிரம்குடா, செரிலிங்கம்பள்ளி, ஹைதராபாத்-500032, தொ.பே: 040-67162222, மின்னஞ்சல்: **rajitha.cholleti@karvy.com.**

இயக்குநர் குழுமத்தின் ஆணைப்படி
63 மூன்ஸ் டெக்னாலஜிஸ் லிமிடெட்-காக

இடம்: மும்பை
நாள்: 24 ஆகஸ்ட் 2019

ஹரிராஜ் சௌஹான்,
மூத்த துணைத்தலைவர் மற்றும் நிறுவனச் செயலாளர்